

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (19.3.2025) முகாம் அலுவலகத்தில், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் திருமதி ஆர். பிரியா, துணை மேயர் மு. மகேஷ்குமார், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ. குமரகுருபரன், வரி விதிப்பு மற்றும் நிதி குழுத் தலைவர் திருமதி சர்பஜெயா தாஸ் நரேந்திரன், ஆகியோர் சந்தித்து, 2025–26ஆம் நிதியாண்டிற்கான பெருநகர சென்னை மாநகராட்சியின் நிதிநிலை அறிக்கை மாமன்றத்தில் தாக்கல் செய்யப்படுவதையொட்டி வாழ்த்துப் பெற்றனர்.



நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நேற்று முன்தினம் (18.03.2025) தலைமைச் செயலகத்தில், 25.03.2025 அன்று நடைபெறவுள்ள நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் மானியக் கோரிக்கை தொடர்பான ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் தமிழ்நாடு நகர்ப்புர உள்கட்டமைப்பு நிதி சேவைகள் நிறுவனத் தலைவர்/அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் எஸ். விஜயகுமார், நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் தா. கார்த்திகேயன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், தமிழ்நாடு நகர்ப்புர நிதி மற்றும் அடிப்படை வசதி மேம்பாட்டுக் கழகத்தின் நிர்வாக இயக்குநர் கே.விவேகானந்தன், புதிய திருப்பூர் பகுதி மேம்பாட்டுக் கழக மேலாண்மை இயக்குநர் ஹனிஷ் சாப்ரா, சென்னை குடிநீர் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் கிரண் குராலா, நகராட்சி நிர்வாக இயக்குநர் எஸ்.சிவராசு, மற்றும் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### இலங்கைக் கடற்படையினரால் – தொடர்ந்து

# மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுத்திட வலுவான தூதரக நடவடிக்கை எடுத்திடுவீர்!

## ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சருக்கு –முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதத்தில் வலியுறுத்தல்!

சென்னை, மார்ச் 20-

**இலங்கைக் கடற்படையினரால் மீனவர்கள் தொடர்ந்து கைது செய்யப்படுவதைத் தடுத்திட வலுவான தூதரக நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், கைது செய்யப்பட்ட மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திடவும் வலியுறுத்தி ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கருக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கடிதம் எழுதியுள்ளார்.**

இது குறித்து அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு வருமாறு:

இராமேஸ்வரம் மீன்பிடித் துறை முகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற 3 மீனவர்களை 18.03.2025 அன்று இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ள நிலையில், கைது செய்யப்பட்டுள்ள அனைத்து மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விடுவிக்க உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும், இந்திய மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் தொடர்ந்து இதுபோன்று கைது செய்யப்படுவதைத் தடுத்திட வலுவான தூதரக நடவடிக்கை மேற்கொள்ள வலியுறுத்தியும் தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க. ஸ்டாலின் அவர்கள், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ். ஜெய்சங்கர் அவர்களுக்கு நேற்று முன்தினம் (18.03. 2025) கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், 2025 ஆம் ஆண்டின் மூன்று மாதங்களுக்குள் இலங்கைக் கடற்படையினரால் தமிழ்நாட்டு மீனவர்கள் கைது செய்யப்படும் பத்தாவது சம்பவத்தை ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றுள்ள முதலமைச்சர் அவர்கள், இராமேஸ்வரம் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து 17.03.2025 அன்று மீன்பிடிக்கச் சென்ற மூன்று மீனவர்களை, அவர்களது மீன்பிடி விசைப்படகுடன் 18.03.2025 அன்று இலங்கைக் கடற்படையினர் கைது செய்துள்ளதை வேதனையுடன் குறிப்பிட்டுள்ளார்.

பாரம்பரிய மீன்பிடிப் பகுதியில் நமது மீனவர்கள் கைது செய்யப்படுவதைத் தடுக்க வலுவான தூதரக முயற்சிகள் தேவை என்று பலமுறை தான் வலியுறுத்திக் கேட்டுக் கொண்ட போதிலும், இது போன்ற கவலையளிக்கக்கூடிய சம்பவங்களின் எண்ணிக்கை தொய்வின்றி தொடர்ந்து அதிகரித்து வருவதாக குறிப்பிட்டுள்ள முதலமைச்சர் அவர்கள், மீனவர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்கு மீன்பிடித் தொழிலையே பெரிதும் நம்பியுள்ளதையும், இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி இதுபோன்று சிறைபிடிக்கப்படுவதால், அவர்களது குடும்பத்தினர் வறுமையின் விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என்றும் தனது கடிதத்தில் வேதனையுடன் குறிப்பிட்டுள்ளார்.

எனவே, தமிழ்நாட்டு மீனவர்கள் மேலும் கைது செய்யப்படாமல் தடுக்கவும், இலங்கை சிறைக் காவலில் வைக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டைச் சேர்ந்த 110 மீனவர்களையும், அவர்களது மீன்பிடிப் படகுகளையும் விரைவில் விடுவிக்க வலுவான தூதரக முயற்சிகளை மேற்கொள்ளுமாறும் ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் டாக்டர் எஸ்.ஜெய்சங்கர் அவர்களுக்கு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில் வலியுறுத்திக் கேட்டுக் கொண்டுள்ளார்.

இவ்வாறு தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிடப்பட்டுள்ளது.

### கோவை மாநகருக்கு

# தண்ணீர் பற்றாக்குறை இல்லாமல் வழங்கப்படும்!

## சட்டப்பேரவையில் – அ.தி.மு.க. உறுப்பினர் கேள்விக்கு – அமைச்சர் கே.என்.நேரு பதில்!

சென்னை, மார்ச் 20 -

சட்டப்பேரவையில் அ.தி.மு.க. உறுப்பினர் எஸ்.பி.வேலுமணி எழுப்பிய கேள்விக்கு கோவை மாநகருக்கு தண்ணீர் பற்றாக்குறை இல்லாமல் வழங்கப்படும் என்று மாநகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு பதிலளிக்கையில் தெரிவித்தார்.



கேள்வி நேரத்தின் போது சிறுவாணி அணையிலிருந்து குடிநீர் விநியோகம் குறித்து கேள்வி எழுப்பியதற்கு நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அளித்த பதில் வருமாறு:-

கேரளாவில் இருக்கிற, சிறுவாணியில் இருக்கிற தண்ணீர் ஒவ்வொரு வருடமும் மழைக் காலத்திலே தேவையான அளவுக்கு முழு கொள்ளளவு நிரப்புவதற்கு அவர்கள் அனுமதிப்பதில்லை. கேட்கின்றபோது ஆழியாறிலே இருக் கின்ற பிரச்சினை யைத் தீர்த்தால் தான் இங்கே தருவேன் என்று சொன்னார்கள்.

நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய தலைவரோடு தொடர்பு கொண்டு, நேரடியாக முதலமைச்சர் அவர்களுடன் பேசி அங்கு தண்ணீர் ஓரளவுக்கு நமக்கு தந்து கொண்டிருக்கிறார்கள். எனவே, கோவையைப் பொறுத்தவரையில் பல்வேறு இடங்களுக்கு பில்லூர் 1,2,3, சிறுவாணி என 4 இடங்களிலுமே 380 mldக்கு மேலாக கோவை நகருக்கு தந்து கொண்டிருக்கிறோம். எனவே, ஒருசில இடங்களில் என்ன குறைபாடு என்று உறுப்பினர் அவர்கள் தெரிவித்தது தெரியவில்லை.

எனவே, அதைப் பார்த்து தண்ணீரைப் பற்றி பிரச்சினையில்லை. இன்றைக்கு கோவை மாநகருக்கு ஏற்கெனவே, கொடுப்பதைவிட கூடுதலாக தண்ணீர் எல்லாம் நிறைய இருக்கிறது. இப்போது கூட நகராட்சிகளுக்கு அதை திருப்பி அனுப்புவதற்குரிய ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. எனவே, இப்போது ரூ.8.9 கோடி கொடுப்பதற்கும் துறையின் செயலாளர் அவர்கள் சொல்லி இருக்கிறார்கள். பணம் அனுப்புவதற்கு அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கிறது.

எனவே, தண்ணீர் பற்றாக்குறை இல்லாமல் உங்களுக்கு வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் கே.என்.நேரு பதிலளித்தார்.

### தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டு

# பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 217 பணிநாடுநர்களுக்கு பணிநியமன ஆணைகள்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி வழங்கினார்!

சென்னை, மார்ச் 20 -

சென்னை தலைமைச் செயலகத்தில், பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வு செய்யப்பட்டு பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 217 பணிநாடுநர்களுக்கு பணிநியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டு பள்ளிக் கல்வித் துறைக்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 186 நேரடி நியமன இளநிலை உதவியாளர்களுக்கு 15.03.2025 அன்று இணைய வழியில் பணிநியமன கலந்தாய்வு நடத்தப்பட்டது.

அக்கலந்தாய்வில் தங்களுக்கு விருப்பமான பணியிடங்களை தேர்வு செய்த 186 பணிநாடுநர்களுக்கும், தமிழ்நாடு பொது நூலகத் துறைக்கு தெரிவு செய்யப்பட்ட 24 பணிநாடுநர்களுக்கும், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகத்திற்கு தெரிவு செய்யப்பட்ட 7 பணிநாடுநர்களுக்கும் ஆக மொத்தம் 217 பணிநாடுநர்களுக்கு, பணிநியமன ஆணைகள் வழங்கப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறை அரசு சிறப்பு செயலர் திருமதி.எஸ்.ஜெயந்தி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் மற்றும் அரசு பொது நூலகத் துறை இயக்குநர் முனைவர்.பொ.சங்கர், பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர்.ச.கண்ணப்பன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக உறுப்பினர் செயலர் முனைவர்.பெ.குப்புசாமி, இணை இயக்குநர் முனைவர்.த.இராஜேந்திரன், சென்னை மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர் புகழேந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### விழுப்புரம் வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி சார்பில்

# மரக்காணம் கிழக்கு ஒன்றியம் நடுக்குப்பத்தில் 1500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டப் பொறுப்பாளர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. வழங்கினார்!

மரக்காணம், மார்ச் 20 -

விழுப்புரம் வடக்கு மாவட்ட தி.மு.க. தொழிலாளர் அணி சார்பில் தி.மு.க. தலைவரும் தமிழ்நாடு முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மரக்காணம் கிழக்கு ஒன்றியம் நடுக்குப்பம் ஊராட்சியில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சிக்கு விழுப்புரம் வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் ப. செந்தில் குமார் தலைமை தாங்கினார். மாவட்ட தொழிலாளர் அணி நிர்வாகிகள் பக்தவச்சலம், ரஷித் கான், வேலாயுதம், சையது சுபான், முருகன், வேல் முருகன், பன்னீர்செல்வம், பூதேரி பாஸ்கர், பாலராஜா, வண்டி சோலை முனுசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். மரக்காணம் கிழக்கு ஒன்றிய பொருளாளர் சந்திரசேகர் அனைவரையும் வரவேற்கிறார்.

நிகழ்ச்சியில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளரும், செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான செஞ்சி மஸ்தான் கலந்து கொண்டு 1500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகள் மற்றும் அறுசுவை உணவு வழங்கும் நிகழ்ச்சியை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார்.

நிகழ்ச்சியில் மாநில தொழிலாளர் அணி செயலாளர் பி.டி.சி செல்வராஜ், மாவட்ட அவைத் தலைவர் டாக்டர் சேகர், மாவட்டப் பொருளாளர் ரமணன், மாவட்டத் துணைச் செயலாளர் மரக்காணம் ரவிக்குமார், ஒன்றிய பெருந்தலைவர் தயாளன், மரக்காணம் ஒன்றிய செயலாளர்கள் பழனி, ரவிச்சந்திரன், திண்டிவனம் நகர செயலாளர் ஆசிரியர் கண்ணன், பொதுக்குழு உறுப்பினர் கதிரேசன், மாவட்ட கவுன்சிலர் புஷ்பவல்லி குப்புராஜ், நடுக்குப்பம் ஊராட்சி மன்ற தலைவர் சுந்தர்ராஜ், ஒன்றிய குழு உறுப்பினர் சண்முகசுந்தரம், நிர்வாகிகள் பாலசுந்தரம், தண்டபாணி, சங்கர், மரக்காணம் ஒன்றிய கழக நிர்வாகிகள், ஒன்றிய கவுன்சிலர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள், மாவட்ட அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழகமூத்த முன்னோடிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். விழுப்புரம் வடக்கு மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் செந்தில் குமார் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்திருந்தார். மரக்காணம் கிழக்கு ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் சக்திவேல் நன்றி கூறினார்.

### யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய அந்தஸ்துக்கு

# தமிழ்நாட்டிலிருந்து புதியதாக ஏதாவது பரிந்துரைக்கப் பட்டுள்ளதா?

## மக்களவையில் சி.என்.அண்ணாதுரை கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 20 -

யுனெஸ்கோ உலகப் பாரம்பரிய அந்தஸ்துக்கு தமிழ்நாட்டிலிருந்து புதியதாக ஏதாவது பரிந்துரைக்கப் பட்டுள்ளதா? என மக்களவையில் சி.என். அண்ணாதுரை கேள்வி எழுப்பினார்.



அவர் பேசியது வருமாறு:

(அ) இந்திய தொல்லியல் துறையின் (ASI) கீழ் தற்போது பாதுகாக்கப்பட்டுள்ள தமிழ்நாட்டின் வரலாற்று மற்றும் கலாச்சார தளங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் மாவட்ட வாரியான விவரங்கள்;

(ஆ) கடந்த ஐந்தாண்டுகளில் இத்தளங்களின் பாதுகாப்பு, மறுசீரமைப்பு மற்றும் பாதுகாப்பிற்காக அரசு எடுத்த நடவடிக்கைகளின் விவரங்கள்;

(இ) பல்வேறு அரசுத் திட்டங்களின் கீழ் தமிழ்நாட்டில் உள்ள வரலாற்று மற்றும் கலாச்சாரத் தளங்களைப் பாதுகாப்பதற்காக ஒதுக்கப்பட்ட, விடுவிக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட மொத்த நிதியின் விவரங்கள்;

(ஈ) மெய்நிகர் சுற்றுப் பயணங்கள், டிஜிட்டல் காப்பகங்கள் அல்லது சுற்றுலா பிரச்சாரங்கள் மூலம் வரலாற்று தளங்களை டிஜிட்டல் முறையில் ஆவணப்படுத்த அல்லது விளம்பரப்படுத்த அரசாங்கம் ஏதேனும் நடவடிக்கை எடுத்திருக்கிறதா. அதன் விவரங்கள்.

(இ) யுனெஸ்கோவின் உலக பாரம்பரிய அந்தஸ்துக்கு தமிழ்நாட்டிலிருந்து புதிய தளங்களை பரிந்துரைக்க அல்லது பாதுகாப்பு முயற்சிகளுக்காக சர்வதேச அமைப்புகளுடன் ஒத்துழைக்க அரசாங்கத்திற்கு ஏதேனும் திட்டம் உள்ளதா அப்படியானால். அதன் விவரங்கள் என்ன?

இவ்வாறு அவர் கேள்வி கேட்டிருந்தார்.

அதற்கு ஒன்றிய அரசின் கலாச்சாரத்துறை அமைச்சர் விரிவாக பதிலளித்துள்ளார்.

**முதல்வர் பிறந்த நாள் விழா! மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை!**

# அச்சிறுபாக்கத்தில் நலத்திட்ட உதவிகள் - மாபெரும் பொதுக்கூட்டம்!

## அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி சிறப்புரை!

காஞ்சிபுரம், மார்ச் 20-

காஞ்சிபுரம் தெற்கு மாவட்டம், அச்சிறுபாக்கம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் திராவிட மாடல் அரசின் நாயகர், முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72வது பிறந்த நாள் விழாவை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா மற்றும் இந்தியைத் திணிக்கும் ஒன்றிய பா.ஜ.க. அரசைக் கண்டித்தும் மாபெரும் பொதுக்கூட்டம் நாளை (21.3.2025 - வெள்ளிக்கிழமை) மாலை 5.00 மணிக்கு கடமலைப்புத்தூர், தேசிய நெடுஞ்சாலையில் நடைபெறுகின்றது.

கூட்டத்திற்கு மாவட்டக் கழகச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. தலைமை வகிக்கிறார். ஒன்றியக் கழகச் செயலாளர் ஒன்றியப் பெருந்தலைவர் கே.கண்ணன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகிறார். எஸ்.பொன்மலர், ஜி.சிவக்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

இக்கூட்டத்தில் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கலந்துகொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

### கழகத் தலைவர் தளபதி பிறந்த நாள் விழா!

# பொதுக்கூட்டம் - கலைஞர் நூலகம் திறப்பு விழா!

## அமைப்பாளர் இரா. சிவா அழைப்பு!

புதுச்சேரி, மார்ச் 20 -

புதுச்சேரி மாநில திமுக அமைப்பாளர் இரா. சிவா, எம்.எல்.ஏ., விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: -

புதுச்சேரி மாநில தி.மு.க. மற்றும் தட்டாஞ்சாவடி தொகுதி கழகம் சார்பில் திராவிட மாடல் ஆட்சியின் நாயகர் தளபதி அவர்களின் 72-வது பிறந்தநாள் விழா, தமிழ்நாடு திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க மாபெரும் பொதுக்கூட்டம் இன்று (20-ம் தேதி) மாலை 5.00 மணிக்கு லாஸ் பேட்டை, பாக்குமுடையான்பட்டு, செல்வ விநாயகர் கோவில் அருகில் நடைபெற உள்ளது.

தட்டாஞ்சாவடி தொகுதி செயலாளர் கா.ரா.ஆறுமுகம் தலைமையில் நடைபெறும் பொதுக்கூட்டத்தில், கழக அமைப்புச் செயலாளர், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் ஆர்.எஸ். பாரதி அவர்களும், புதுச்சேரி மாநில தி.மு.க. அமைப்பாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவருமான இரா.சிவா கழகத்தின் சார்பில் சமீபத்தில் நடந்த இளம் பேச்சாளர்கள் போட்டியில் கழகத் தலைவர் மற்றும் சின்னாவர் ஆகியோர் முன்னிலையில் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைமை கழக இளம் பேச்சாளர்கள் ர. கருணாநிதி மற்றும் செல்வி. வி. ஜாஸ்மின், அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், முன்னாள் எம்.பி. சி.பி. திருநாவுக்கரசு, துணை அமைப்பாளர் வி. அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., பொருளாளர் இரா.செந்தில்குமார், எம்.எல்.ஏ., மாநில இளைஞர் அணி அமைப்பாளர் எல். சம்பத், எம்.எல்.ஏ., ஆகியோர் சிறப்புரை நிகழ்த்த உள்ளனர்.



முன்னதாக அன்று மாலை 5.00 மணியளவில் இலாசுப் பேட்டை தொகுதி கழகம் சார்பில், தொகுதி செயலாளர் கோ. தியாகராஜன் அவர்கள் ஏற்பாட்டில் இலாசுப்பேட்டை கழக அலுவலகத்தில் கலைஞர் நூற்றாண்டு நிறைவு விழா கலைஞர் நூலகம் திறப்பு விழா நடைபெறுகிறது.

இந்த மாபெரும் பொதுக் கூட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ளும்படி இரா. சிவா அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.



தலைமைச் செயலகத்தில், நேற்று (19.03.2025) பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி பள்ளிக் கல்வித் துறையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலமாக தேர்வு செய்யப்பட்ட 217 இளநிலை உதவியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் பள்ளிக்கல்வித்துறை அரசு சிறப்பு செயலர் திருமதி எஸ்.ஜெயந்தி, தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக மேலாண்மை இயக்குநர் மற்றும் அரசு பொது நூலகத்துறை இயக்குநர் முனைவர் பொ.சங்கர், பள்ளிக் கல்வி இயக்குநர் முனைவர் ச.கண்ணப்பன், தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழக உறுப்பினர் செயலர் முனைவர் பெ.குப்புசாமி, இணை இயக்குநர் பணியாளர் தொகுதி டி. ராஜேந்திரன், முதன்மைக் கல்வி அலுவலர் புகழேந்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.